பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
27 09 2024 **FRIDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தொலைத்தொடர்பு துறையின் உற்பத்தி முனையமாக இந்தியா உருவெடுக்கும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

2. சிறந்த சுற்றுலா கிராமங்களுக்கான போட்டியில் வெற்றிபெற்ற 36 கிராமங்களின் பட்டியலில் தமிழகத்தின் கீழடி மற்றும் மேல்கலிங்கம்பட்டி இடம்பெற்றுள்ளது.

3. இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறை பிடிக்கப்படும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

4. சத்துணவுத் திட்டத்திற்கான முட்டை கொள்முதலில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகவும், இதுகுறித்து தமிழக அரசு விசாரணை நடத்த வேண்டும் என்றும் பிஜேபி கோரியுள்ளது.

5. **Dammam** சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா ஆறு தங்கம் உட்பட 27 பதக்கங்களை வென்றது.

<<<<<>>>>>>

தொலைத்தொடர்பு துறையின் உற்பத்தி முனையமாக இந்தியா உருவெடுக்கும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

சிஸ்கோ நிறுவனத்தின் அதிநவீன உற்பத்தி நிலையத்தை இன்று சென்னையில் தொடங்கி வைத்து அவர் உரையாற்றினார்.

உலக அளவில் வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப தேவையை இந்த புதிய உற்பத்திப் பிரிவு பூர்த்தி செய்யும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்த உற்பத்திப் பிரிவின் மூலம் ஆயிரத்து 200 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து, சென்னை ஐஐடி-யில் மாணவர்களிடையே உரையாற்றிய அவர், 6-ஜி தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதில் இந்தியா உலகத்திற்கு முன்னோடியாக திகழும் என்று தெரிவித்தார்.

நாடுமுழுவதும் தற்போது 117 கோடி கைபேசி இணைப்புகள் செயல்பாட்டில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பு, 25 கோடியாக இருந்த இணையதள இணைப்புகளின் எண்ணிக்கை தற்போது 97 கோடியாக அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

5-ஜி தொழில்நுட்ப சேவை நகர்ப்புறங்களில் 95 சதவீதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஆயுர்வேத மருத்துவ சிகிச்சைக்கான ஆராய்ச்சிப் பணிகளுக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக ஆயுஷ்துறை அமைச்சர் திரு. **Prataprao Jadhav** கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தமது துறையின் 100 நாட்கள் சாதனை குறித்து செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

உலக அளவில் சுகாதார சேவைகளை வழங்குவதில் ஆயுஷ் மருத்துவ முறையையும் இணைப்பதற்கான ஒப்பந்தம் உலக சுகாதார அமைப்புடன் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஆயுஷ் மருத்துவ சிகிச்சை முறைக்கான மருந்துகளை வழங்குவதற்கான சிறப்பு மருந்தகங்கள் தாலுகா அளவில் ஏற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மூத்த குடிமக்களின் நலனுக்காக நாடுமுழுவதும் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆயுஷ் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும் திரு. திரு. **Prataprao Jadhav** கூறினார்.

<<<<<>>>>>>

சிறந்த சுற்றுலா கிராமங்களுக்கான போட்டியில் வெற்றிபெற்ற 36 கிராமங்களின் பட்டியலில் தமிழகத்தின் கீழடி மற்றும் மேல்கலிங்கம்பட்டி இடம்பெற்றுள்ளது.

சர்வதேச சுற்றுலா தினத்தை ஒட்டி, இப்போட்டிக்கான முடிவுகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.

795 கிராமங்களின் சார்பில் விண்ணப்பங்கள் பெறப்பட்டதாகவும், எட்டு பிரிவுகளின் அடிப்படையில் சிறந்த சுற்றுலா கிராமங்களாக 36 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டதாகவும் மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில் பாரம்பரிய சுற்றுலா கிராமங்கள் பட்டியலில் கீழடியும், ஆன்மீக சுற்றுலா கிராமங்கள் பட்டியலில் மேல்கலிங்கம்பட்டியும் இடம்பெற்றுள்ளன.

<<<<<>>>>>>

பிரம்மகுமாரிகள் அமைப்பு சார்பில் நடைபெற்ற தேசிய ஊடக மாநாட்டில், தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் பங்கேற்றார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் கருத்து தெரிவித்துள்ள திரு. எல். முருகன், மவுண்ட் அபுவில் நடைபெற்ற இந்த மாநாட்டில் ஆக்கபூர்வமான விவாதங்கள் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>

பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின் பணிகளை செயல்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஊரக வளர்ச்சித்துறை தொழில்நுட்ப உதவியாளர்களை, தமிழக அரசு பணிநீக்கம் செய்திருப்பது கண்டிக்கத்தக்கது என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பாக பணியாற்றி வந்த 800 பேர் வேலைவாய்ப்பை இழந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழக அரசு இவர்களை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் என்றும் திரு. ராமதாசு கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் சத்துணவு திட்டத்திற்காக வழங்கப்படும் முட்டை கொள்முதலில் முறைகேடு நடைபெறுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் மாநிலம் முழுவதும் அரசுப் பள்ளிகளில் தரமற்ற முட்டைகள் விநியோகம் செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கடந்த 3 ஆண்டுகளில் 300 கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடு நடைபெற்றுள்ளதாக அதில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்து விசாரித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், பள்ளி மாணவர்களுக்கு தரமான சத்துணவு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் பிஜேபி அந்த அறிக்கையில் கோரியுள்ளது.

<<<<<>>>>>>

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறை பிடிக்கப்படும் பிரச்சினைக்கு மத்திய அரசு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து இது தொடர்பான கோரிக்கை மனுவினை சமர்ப்பித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர், தமிழகத்தின் வளர்ச்சிக்கான பல்வேறு கோரிக்கைகளையும் இந்த சந்திப்பின் போது வலியுறுத்தியதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - முதலமைச்சர் 30 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட ஏழு மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 57 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>>

மாவட்டச் செய்திகள்

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மத்திய மக்கள் தொடர்பகத்தின் சார்பில் கோவை - சூலூர் பகுதியில் உள்ள கல்லூரியில் தூய்மையே சேவை இயக்கம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

<<<<<>>>>>>

சேலம் ரயில் நிலையத்தில், தூய்மையே சேவை இயக்கத்தின் ஒரு பகுதியாக சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

<<<<<>>>>>>

மதுரை வெண்கலக்கடைத் தெருவில் உள்ள கோ-ஆப் டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி பண்டிகை சிறப்பு தள்ளுபடி விற்பனையை ஆட்சியர் திருமதி. சங்கீதா தொடங்கி வைத்தார்.

<<<<<>>>>>>

மதுரை மாநகராட்சி மாமன்றக்கூட்டம் இன்று நடைபெற்றது.

<<<<<>>>>>>

திருப்பூர் மாவட்டத்தில், தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ், குப்பைகள் இயற்கை உரமாக மாற்றி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

<<<<<>>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வங்கியாளர்கள் கூட்டம், ஆட்சியர் திரு. பிரசாந்த் தலைமையில் இன்று நடைபெற்றது.

<<<<<>>>>>

திருவாரூர் மாவட்டத்தில் 37 ஆயிரம் ஹெக்டேரில் குறுவை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி. சாருஸ்ரீ கூறியுள்ளார்.

<<<<<>>>>>

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஊரக புத்தாக்கத் திட்டத்தை செயல்படுத்தி, விவசாயிகளை தொழில் முனைவோர்களாக உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஆட்சியர் திரு. தர்ப்பகராஜ் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கரில் உள்ள அருள்மிகு யோகலக்ஷ்மி நரசிம்மர் மலைக்கோவிலில் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினரின் பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

<<<<<>>>>>>

புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், ஒரு லட்சத்து 14 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்து வருவதாக ஆட்சியர் திருமதி. அருணா கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

சவுதி அரேபியாவின் **Dammam**-ல் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா ஆறு தங்கம், ஏழு வெள்ளி, 14 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

ஒற்றையர் பிரிவுகளில் **Suhana Saini, Hansini Mathan, Sarthak Arya, Kavya Bhatt** ஆகியோர் தங்கப்பதக்கங்களை வென்றனர்.

இரட்டையர் பிரிவுகளில் **Sarthak Arya - Kavya Bhatt** இணையும், **Jeniffer Varghese – Balamurugan Rajasekar** இணையும் தங்கப்பதக்கம் வென்றது.

<<<<<>>>>>>

**Macau** ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Treesa Jolly – Gayatri Gopichand** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, தைவானின் **Hsu Yin Hui – Lin Jhih Yun** இணையை 21-12, 21-17 என்ற செட்கணக்கில் வென்றது.

**<<<<<>>>>>>**

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் மழை காரணமாக முன்கூட்டியே முடித்துக் கொள்ளப்பட்டது.

கான்பூரில் இன்று தொடங்கிய இப்போட்டியில், டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த பங்களாதேஷ் முதல் இன்னிங்ஸில் மூன்று விக்கெட் இழப்புக்கு 107 ரன் எடுத்திருந்த நிலையில், மழை குறுக்கிட்டதன் காரணமாக ஆட்டம் தடைபட்டது.

இதன்பின்னர் போதிய வெளிச்சமின்மை மற்றும் மழை காரணமாக முதல்நாள் ஆட்டம் முடித்துக் கொள்ளப்பட்டது.

<<<<<>>>>>>

ஆசிய இளையோர் வில்வித்தை சாம்பியன் போட்டி, சீன தைபே-யில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் 23 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.

<<<<<END>>>>>>